தேதி : 20.09.2024

Spl.C.C. : 73/2014

PW. : 4

பெயர் : Tr.S.Sampath

எதிரி ஆஜர்.

சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

(*சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்)*

1. இந்த வழக்கின் சம்பவ காலம் எந்த வருடம் எந்த தேதி என்று தெரியுமா என்றால் 09.11.2011 ஆகும். அந்த காலத்தில் நான் என்ன பணியில் இருந்தேன் என்றால் உதவி இயக்குநர் (மாநில சுகாதார புலனாய்வு மையம்–State Bureau of Health Intelligence) ஆக துணை இயக்குநர், சுகாதார பணிகள், சிவகங்கை அலுவலகத்தில் பணிபுரிந்தேன். அந்த காலக்கட்டத்தில் என்னுடைய அடிப்படை ஊதியம் எவ்வளவு என்றால் ரூ.15,600/– ஆகும்.

2. நான் என்ன Grade அலுவலர் என்றால் B–Grade அலுவலராக பணிபுரிந்தேன். Vigilance அலுவலகத்திற்கும் எனது அலுவலகத்திற்கும்

எவ்வளவு தூரம் என்றால் தெரியாது. Vigilance அலுவலகம் எங்கு உள்ளது என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அப்போது எனது மேலதிகாரி யார் என்றால் Deputy Director அவரது பெயர் ஞாபகமில்லை. எனது மேலதிகாரியின் அலுவலகமும் எனது அலுவலகமும் ஒன்று தான் என்றால் ஆமாம்.

3. Vigilance அலுவலகத்திலிருந்து எனக்கு அழைப்போ அல்லது எழுத்து மூலமான அழைப்பாணையோ வந்ததா என்றால் எனக்கு நேரடியாக எந்த விதமான கடிதமும் வரவில்லை, ஆனால் எனது மேலதிகாரிக்கு வந்தது. மேலதிகாரிக்கு எழுத்து மூலமான உத்தரவு எதுவும் வந்ததா என்றால் ஆமாம். அந்த உத்தரவினை நான் பார்த்தேனா என்றால் அது எனக்கு Forward செய்யப்பட்டது.

4. எத்தனை மணிக்கு என்னை மேலதிகாரி எங்களது அலுவலகத்திலிருந்து லஞ்ச ஒழிப்பு அலுவலகத்திற்கு என்னை போகச் சொன்னார் என்றால் அந்த கடிதத்தில் 1.30 மணிக்கு வரச்சொல்லியிருந்தார்கள், அதன்படி நான் 1.30 மணிக்கு அங்கு சென்றேன். நான் எனது அலுவலகத்திலிருந்து Vigilance அலுவலகத்திற்கு சென்றதாக சொல்வது குறித்து எனது அலுவலகத்தில் வேறு யாருக்காவது

தெரியுமா என்றால் அந்த கடிதத்தினை யார் யார் பார்த்தார்கள் என்று எனக்கு தெரியாது, அவ்வாறு கடிதத்தினை பார்த்தவர்களுக்கு அது குறித்த விபரம் தெரிந்திருக்கும். எனது அலுவலகத்திலிருந்து வெளி அலுவலாக செல்லும்போது Movement Register ல் கையொப்பம் செய்தேனா என்றால் ஆமாம். அவ்வாறு வெளி வேலையாக சென்றபோது Tour TA எதுவும் பெற்றேனா என்றால் On Duty ல் சென்றதால் அவ்வாறு எதுவும் பெறவில்லை. அது எனது அலுவலகம் சம்பந்தப்பட்ட பணியா என்றால் ஆமாம். Vigilance அலுவலகத்திலிருந்து எனது மேலதிகாரிக்கு வந்த கடிதத்தில் AD to Attend என்று எழுதி எனக்கு அந்த கடிதத்தினை Forward செய்தாரா என்றால் ஆமாம். என்னை ஆய்வாளர் விசாரித்தாரா என்றால் விசாரித்தார். அந்த ஆய்வாளர் யார் என்றால் திரு.பாண்டியராஜன் அவர்கள். மேற்படி விபரத்தை என்னை ஆய்வாளர் விசாரித்தபோது நான் கூறியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். நான் அவ்வாறு எதுவும் கூறவில்லை என்றும் இவ்வழக்கிற்காக அவ்வாறு கூறியதாக உண்மைக்கு மாறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

5. Vigilance அலுவலகம் எங்கு உள்ளது என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது, அங்கு நான் போனதில்லை. கீழடி மின்சார

அலுவலகத்திற்கு சென்றேனா என்றால் அந்த நிகழ்வு நடந்த அன்று இரவு அங்கு சென்றேன். கீழடி மின்சார அலுவலகம் கீழடியில் எங்கு உள்ளது என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது, அந்த நிகழ்வு நடப்பதற்காக என்னை அழைத்துச் சென்றார்கள். Vijay Lodge எங்கு உள்ளது என்று எனக்கு தெரியுமா என்றால் அது Vijay Lodge அல்ல Hotel Vijay, எங்கு உள்ளது என்று எனக்கு தெரியாது.

<u>**நீதிமன்ற கேள்வி மற்றும் பதில்:**</u>

**Hotel Vijay க்கு நான் பொறிவைப்பு நிகழ்வு நடக்கும்போது நான் சென்றேனா என்றால் சென்றேன். அந்த ஹோட்டல் எங்கு உள்ளது என்றால் திருப்பரங்குன்றம் சாலையில் உள்ளது.**

திருப்பரங்குன்றம் சாலை என்பது எந்த Area என்றால் மதுரையில் உள்ளது. மதுரையில் திருப்பரங்குன்றம் சாலை எங்கு உள்ளது என்றால் தெரியாது. நான் Hotel Vijay க்கு யாருடன் சென்றேன் என்றால் Vigilance Party உடன் சென்றேன். Vigilance Party என்றால் யார் யார் வந்தார்கள் என்றால் DSP, Inspector Vijay, Head Constable Venkadesan, அரசு சாட்சி கோபால், வாதி முருகசாமி மற்றும் நான் ஆகியோர் ஒரே வாகனத்தில் சென்றோம். அது எந்த வாகனம் என்றால் Police Jeep ஆகும். அந்த

போலிஸ் வாகனத்தின் பதிவெண் தெரியுமா என்றால் தெரியாது. எங்கு இருந்து என்னை அழைத்து சென்றார்கள் என்றால் நான் முதலில் Vigilance அலுவலகம் சென்ற பிறகு அங்கிருந்து பூவந்தி வழியாக சிலைமான் என்ற இடத்திற்கு சென்றோம், அதன்பிறகு திருப்பரங்குன்றம் சாலை வழியாக Police Club அருகே நின்றோம். அங்கிருந்து Hotel Vijay க்கு சென்றோம்.

6. கீழடி அலுவலகத்திற்கு செல்லும் முன்பாக Vigilance போலிசார் என்னிடம் ஏதேனும் கையொப்பம் வாங்கினார்களா என்றால் ஒப்படைப்பு மகஜரில் கையொப்பம் செய்தேன். அந்த ஒப்படைப்பு மகஜர் எத்தனை பக்கங்களை கொண்டது என்றால் தெரியாது. அது கையால் எழுதப்பட்டதா அல்லது கணினியில் தட்டச்சு செய்யப்பட்டதா என்றால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டதாகும். அங்கு வைத்து எத்தனை கையொப்பம் செய்தேன் என்றால் ஞாபகமில்லை. நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ளது போல் நான் எனது அலுவலகத்திலிருந்து Vigilance அலுவலகத்திற்கு செல்லவில்லை என்றும் அங்கு வைத்து வாதியையோ மற்றொரு அரசு சாட்சியையோ எனக்கு அறிமுகம் செய்து வைக்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. அதுபோல், அங்கு

வைத்து எந்த வித பரிசோதனையும் செய்யப்படவில்லை என்றும் அதன் முக்கியத்துவத்தை எனக்கு விளக்கி கூறவில்லை என்றும் சொன்னால் சரியல்ல.

7. வாதி முருகசாமியை எனக்கு தெரியுமா என்றால் நிகழ்வு நடந்த போது எனக்கு தெரியும் அதற்கு முன்பு தெரியாது. வாதி முருகசாமி என்ன நிறமாக இருப்பார் என்றால் மாநிறம் ஆகும். அவரின் வயது என்ன என்றால் தெரியாது. அவர் அன்றைய தினம் வேட்டி சட்டை அணிந்திருந்தாரா அல்லது பேண்ட் சட்டை அணிந்திருந்தாரா என்றால் பேண்ட் சட்டை அணிந்திருந்தார். அவர் எந்த ஊர் என்று எனக்கு தெரியுமா என்றால் அவர் திருப்பூரைச் சேர்ந்தவர்.

8. மற்றொரு அரசு சாட்சி திரு.கோபால் என்ன பணியில் இருந்தார் என்றால் மாவட்ட கருவூலத்தில் கண்காணிப்பாளராக பணிபுரிந்தார். சிவகங்கை Vigilance அலுவலகத்திலிருந்து எத்தனை மணிக்கு கீழடி மின்சார வாரிய அலுவலகத்திற்கு கிளம்பினீர்கள் என்றால் மாலை 3.30 மணிக்கு கிளம்பினோம். சிலைமானுக்கு எத்தனை மணிக்கு சென்றடைந்தோம் என்றால் 4.30 மணிக்கு சென்றடைந்தோம். சிலைமான் மெயின்ரோட்டில் எவ்வளவு நேரம் இருந்தோம் என்றால் சுமார் ஒரு

மணிநேரம் இருந்தோம். சிலைமானிலிருந்து எத்தனை மணிக்கு எங்கு சென்றோம் என்றால் 5.30 மணிக்கு கிளம்பி, Hotel Vijay க்கு செல்வதற்கு முன்பு திருப்பரங்குன்றம் சாலையில் உள்ள போலிஸ் கிளப்பில் நின்று கொண்டிருந்தோம். திருப்பரங்குன்றம் சாலையில் உள்ள போலிஸ் கிளப்பிலிருந்து Hotel Vijay எவ்வளவு தூரம் என்றால் தெரியாது. போலிஸ் கிளப்பில் எவ்வளவு நேரம் நின்று கொண்டிருந்தோம் என்றால் ஞாபகமில்லை.

9. முருகசாமி என்பவர் Vigilance அலுவலகத்திற்கு எப்போது வந்தார் என்று எனக்கு தெரியுமா என்றால் நான் Vigilance அலுவலகம் செல்லும்போதே அவர் அங்கிருந்தார். முருகசாமி கொடுத்த புகாரை நான் பார்த்தேனா என்றால் இல்லை. முருகசாமியின் செல்போன் எண் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. ஹோட்டல் விஜய் எத்தனை தளங்களைக் கொண்டது என்றால் 5 தளங்களை கொண்டது. Hotel Vijay எந்த திசையைப் பார்த்து அமைந்துள்ளது என்றால் கிழக்கு திசையைப்பார்த்து அமைந்துள்ளது.

10. நான் வாதி முருகசாமியுடன் Hotel Vijay க்கு செல்லவில்லை என்றால் வாதி முருகசாமியுடன் சேர்ந்து ஒன்றாகதான் சென்றோம்.

நாங்கள் எல்லோரும் சேர்ந்துதான் எதிரி மீனாட்சிசுந்தரத்தை பார்த்தோம் என்றால் அப்போது எதிரி அங்கு வரவில்லை. எத்தனை முறை Hotel Vijay க்கு சென்றோம் என்றால் ஒரு முறை தான் சென்றோம், ஒருமுறை தான் வெளியே வந்தோம். எத்தனை மணிக்கு Hotel Vijay க்கு சென்றோம் என்றால் மாலை 6.30 மணிக்கு மேல் சென்றோம். Hotel Vijay க்கு சென்றவுடன் எங்கு இருந்தோம் என்றால் முதலில் நாங்கள் எல்லோரும் 3 வது தளத்தில் உள்ள முருகசாமியின் அறை எண்.308 க்கு சென்றோம்.

11. நாங்கள் அந்த அறையில் இருந்த போது மீனாட்சிசுந்தரம் அங்கு வந்தாரா என்றால் அவர் வருவதற்கு முன் நாங்கள் 3 பேர் வெளியே வந்து விட்டோம். அந்த மூன்று பேர் யார் யார் என்றால் நான், காவல் ஆய்வாளர் திரு.ராஜா மற்றும் தலைமைக்காவலர் திரு.வெங்கடேசன் ஆகியோர். வாதியுடன் யார் யார் சென்று மீனாட்சிசுந்தரத்தை பார்த்தார்கள் என்றால் அரசு சாட்சி கோபால். வாதியும், அரசு சாட்சி கோபாலும் சென்று மீனாட்சிசுந்தரத்தை பார்த்தபோது அங்கு என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

12. நான் சொல்வதுபோல், நாங்கள் Hotel Vijay க்கு செல்லவில்லை என்றும் அங்கு என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது

என்றும் சொன்னால் சரியல்ல. Hotel Vijay ல் வைத்து என்னிடம் ஏதேனும் கையொப்பம் வாங்கினார்களா என்றால் வாங்கினார்கள். என்னென்ன ஆவணத்தில் கையொப்பம் வாங்கினார்கள் என்றால் கைப்பற்றுதல் மகஜரில் கையொப்பம் செய்தேன். கைப்பற்றுதல் மகஜரில் மட்டும் தான் கையொப்பம் செய்தேனா என்றால் எதிரியை கைது செய்தது குறித்த ஆவணத்தில் கையொப்பம் செய்தேன்.

13. Hotel Vijay ல் வைத்து கையொப்பம் வாங்கியதாக சொல்லும் கைப்பற்றுதல் மகஜல் கையால் எழுதப்பட்டதா என்றால் கையால் எழுதப்பட்டதுதான். நான் அதனை படித்து பார்த்தேனா என்றால் ஞாபகமில்லை. அது எத்தனை பக்கங்கள் கொண்டது என்றால் ஞாபகமில்லை. எதிரியை எத்தனை மணிக்கு கைது செய்தார்கள் என்றால் இரவு 10.00 மணிக்கு கைது செய்தார்கள். எதிரியை கைது செய்தது குறித்து வேறு யாருக்காவது தகவல் சொன்னார்களா என்றால் எதிரியின் வீட்டிற்கு, திருப்புவனம் ADE க்கு, EE Incharge மானாமதுரைக்கு தகவல் சொன்னார்கள்.

14. எதிரியை நான் எங்கு வைத்து எத்தனை மணிக்கு பார்த்தேன் என்றால் Hotel Vijay ல் எதிரி வாதியின் அறையிலிருந்து

வெளியே வரும்போது இரவு சுமார் 7.50 மணிக்கு பார்த்தேன். எதிரி அன்றைய தினம் என்ன உடை அணிந்திருந்தார் என்றால் கருப்பு நிற பேண்ட், சட்டையும் அணிந்திருந்தார். சட்டையின் நிறம் ஞாபகமில்லை. கருப்பு நிற பேண்ட்டை கைப்பற்றினார்களா என்றால் ஆமாம். கருப்பு நிற பேண்ட்டை கைப்பற்றியதற்கு போலிசார் படிவம் 91 தயார் செய்து கையொப்பம் வாங்கினார்களா என்றால் கையொப்பம் செய்தேன், ஆனால் அது படிவம் 91 ஆ என்று எனக்கு தெரியாது. மாற்று உடை கொடுத்ததாக சொல்லும் உடை என்ன என்றால் வெள்ளை நிற வேட்டி. அது எங்கிருந்து வாங்கப்பட்டது என்றால் அது எனக்கு தெரியாது. நான் சொல்வதுபோல் கருப்பு நிற பேண்ட் எதுவும் கைப்பற்றப்படவில்லை என்றும், அங்கு வைத்து எதிரிக்கு மாற்று உடை எதுவும் கொடுக்கப்படவில்லை என்றும் சொன்னால் சரியல்ல.

15. Hotel Vijay அமைந்துள்ள பகுதி மக்கள் நடமாட்டம் அதிகமாக உள்ள பகுதி என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. Hotel Vijay க்கு அருகில் என்ன உள்ளது என்று எனக்கு தெரியுமா என்றால் மாலைமுரசு அலுவலகம் உள்ளது. அந்த Hotel–ல் CCTV உள்ளதா என்றால் தெரியாது. Hotel Vijay ல் உள்ளே நுழைந்தவுடன் வரவேற்பு அறை உள்ளது

என்றால் ஆமாம். அதற்கு 5 அடி அருகில் Lift வசதி உள்ளதா என்றால் இல்லை. 3 வது தளத்தில் எத்தனை அறை உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மாடிப்படியில் ஏறி சென்றவுடன் அந்த அறை எண்308 எந்த பக்கத்தில், எந்த திசையில் எத்தனை அறைகள் கடந்து அந்த அறை அமைந்துள்ளது என்றால் மாடிப்படியில் ஏறி இடது பக்கமாக சென்று மீண்டும் வலதுபுறம் திரும்பி மேற்கு பார்த்த வாசல் கொண்ட அறை எண்308 க்கு சென்றோம். எத்தனை அறைகள் கடந்து சென்றோம் என்றால் எத்தனை அறைகள் என்று நான் எண்ணவில்லை. அறை எண்308 க்கு எதிரே எந்த எண் கொண்ட அறை இருந்தது என்றால் ஞாபகமில்லை.

16. அறை எண்308 சாவி போட்டு திறக்கக்கூடியதா அல்லது Card போட்டு திறக்கக்கூடியதா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எதிரி மீனாட்சிசுந்தரம் அறை எண்308 க்கு செல்லும்போது நாங்கள் எங்கு இருந்தோம் என்றால் நான், ஆய்வாளர் திரு.ராஜா மற்றும் போலிஸ் பார்ட்டி ஆகியோர் 3 வது தளத்திலிருந்து 4 வது தளத்திற்கு செல்லும் படிக்கட்டில் உட்காந்திருந்தோம். அந்தப்படிக்கட்டிலிருந்து அறை எண் 308 எவ்வளவு தூரத்தில் இருந்தது என்றால் சுமார் 60 அடி தூரத்தில் இருந்தது. எதிரி

மீனாட்சிசுந்தரம் அறை எண்308 க்கு எவ்வளவு நேரம் கழித்து வந்தார் என்றால் மாலை 7.45 மணிக்கு உள்ளே நுழைந்து மாலை 7.50 மணிக்கு வெளியே வந்தார்.

17. நான் சொல்வது போல் சொன்ன நேரத்தில் அறை எண்308 க்கு எதிரி வரவில்லை என்றால் சரியல்ல. நான் சொல்வதுபோல் அறை எண்308 க்கு ஆய்வாளர் உள்ளிட்ட பார்ட்டியினர் செல்லவில்லை என்றால் சரியல்ல. அங்கு வைத்து எதிரி வாதியிடம் பணம் கேட்கவும் இல்லை, பணம் வாங்கவும் இல்லை என்றால் சரியல்ல. அந்த அறையில் வைத்து பரிசோதனை எதுவும் செய்யவில்லை என்றும், பணம் எதுவும் கைப்பற்றப்படவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. அங்கு வைத்து எதிரியை கைது செய்யவில்லை என்றும் அங்கு வைத்து ஒப்படைப்பு மகஜர் மற்றும் கைது குறிப்பாணை தயார் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. அந்த மகஜர் மற்றும் கைது குறிப்பாணையில் நான் அங்கு வைத்து கையொப்பம் எதுவும் செய்யவில்லை என்றால் சரியல்ல.

18. எதிரியின் வீடு எங்குள்ளது என்று எனக்கு தெரியுமா என்றால் மதுரை வில்லாபுரத்தில் தமிழ்நாடு வீட்டுவசதி வாரிய குடியிருப்பு, க.எண்.4895–ல் அமைந்துள்ளது. நான் எதிரியின் வீட்டிற்கு

செல்லவேயில்லை என்றால் சரியல்ல. எதிரி அன்றைய தினம் பெரியார் பேருந்து நிலையத்தில் இறங்கி Hotel Vijay வழியாக தனது வீட்டிற்கு செல்வதற்காக தெற்கு நோக்கி சென்றார் என்றும் அப்போது வாதி முருகசாமி அவரை வழி மறித்து தனக்கு மதுரையில் EB தளவாட சாமான்கள் விற்கும் கடை எங்கு இருக்கிறது என்று தனக்கு தெரியாது என்றும் எதிரி தன்னுடன் வந்து கடையைக் காட்டி சாமான்களை வாங்கித்தருமாறு கேட்டார் என்றும் அவ்வாறு எதிரி முன்னும், வாதி முருகசாமி பின்னும் பேச்சு கொடுத்துக்கொண்டே சென்று கொண்டிருக்கும்போது எதிரிக்கு தெரியாமல் எதிரி அணிந்திருந்த பேண்ட்டின் பின் பாக்கெட்டில் ஆய்வாளர் ஆலோசனையின்படி பணத்தை கத்தையாக வாதி முருகசாமி திணித்தார் என்றும் அதை சற்றும் எதிர் பாராத எதிரி என்ன சார் என்று கேட்டுக்கொண்டே தன் பாக்கெட்டிலிருந்த பணத்தை வெளியே எடுத்த போது தெரு ஓரத்தில் நின்றுகொண்டிருந்த ஆய்வாளர் மற்றும் பார்ட்டி அங்கு பொது மக்கள் அதிகமாக இருந்ததால் எதிரியை அப்படியே ஜீப்பில் ஏற்றிக்கொண்டு சிவகங்கை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திற்கு அழைத்து கொண்டு வந்து விட்டார்கள் என்றால் சரியல்ல. சிவகங்கை

ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் வைத்து எதிரியை நிர்பந்தப்படுத்தி பல ஆவணங்களில் கையொப்பம் பெற்றார்கள் என்றால் சரியல்ல. எதிரியை கைது செய்வது சம்பந்தமாக Hotel Vijay ல் அறை எண் 308 லிருந்து கைது குறிப்பாணை எதுவும் தயார் செய்யப்படவில்லை என்றும் எதிரியை கைது செய்ததை முறையாக அவருடைய குடும்பத்திற்கு தெரியப்படுத்தவில்லை என்றும் சொன்னால் சரியல்ல.

19. எதிரி கைது செய்யப்பட்டது குறித்து மற்றவர்கள் மூலம் எதிரியின் குடும்பத்தார் தெரிந்துகொண்டு லஞ்ச ஒழிப்பு அலுவலகம் வந்தபோது எதிரியின் வீட்டை சோதனை செய்யாமலேயே ஒரு சோதனை ஜாபிதா தயார் செய்து எதிரியின் மகளிடம் மிரட்டி கையெழுத்து பெறப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. நான் சொல்வது போல் Hotel Vijaly ல் அறை எண்308 ல் இருந்து அ.த.சா.ஆ.12 கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்யப்படவில்லை என்றும் அங்கு வைத்து லாட்ஜ் மேனேஜரிடம் கையெழுத்து பெறப்படவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. லாட்ஜ் மேலாளரை லஞ்ச ஒழிப்பு அலுவலகத்திற்கு வரவழைத்து அங்கு வைத்து அ.த.சா.ஆ.12 ல் மிரட்டி கையெழுதது பெறப்பட்டது என்றால் சரியல்ல.

எதிரியின் வீட்டிற்கு செல்லாமலும் எந்த வித சோதனையும் நடத்தாமலும் எதிரியின் வீட்டிற்கு சென்றதாகவும் அங்கு வைத்து அ.த.சா.ஆ.13 சோதனை ஜாபிதா தாயர் செய்ததாக சொல்வதும் உண்மைக்கு புறம்பானது என்றால் சரியல்ல. கீழடியில் உள்ள எதிரியின் அலுவலகம் எந்த திசையை நோக்கி எந்த தெருவில் அமைந்துள்ளது என்றால் ஞாபகமில்லை. எதிரியின் அலுவலகத்தில் எத்தனை அறைகள் உள்ளன என்றால் ஞாபகமில்லை. கீழடி அலுவலகத்திற்கு நாங்கள் செல்லவும் இல்லை என்றும், அங்கு வைத்து அ.த.சா.ஆ.14 முதல் அ.த.சா.ஆ.19 வரையான ஆவணங்கள் கைப்பற்றப்படவும் இல்லை என்றும், அ.த.சா.ஆ.20 கைப்பற்றுதல் மகஜர் அங்கு வைத்து தயார் செய்யப்படவில்லை என்றும், அ.த.சா.ஆ.14 முதல் அ.த.சா.ஆ.19 வரையான ஆவணங்களை லஞ்ச ஒழிப்பு அலுவலகத்திற்கு கொண்டு வரச்சொல்லி அங்கு வைத்து அ.த.சா.ஆ.20 கைப்பற்றுதல் மகஜர் பொய்யாக தயார் செய்யப்பட்டது என்றும் சொன்னால் சரியல்ல.

20. திரு.குதாபக்ஸ் என்பவர் அ.சா.2 முருகசாமி இடத்திற்கு அவர் நிலத்தின் வழியாக மின்கம்பம் ஊன்றக்கூடாது என்று ஆட்சேபித்திருந்தார் என்று எதிரி ஆய்வாளரிடம் தெரிவித்திருந்தார்

என்றால் சரிதான். ஆனால் ஆய்வாளர் அ.சா.2 முருகசாமியை அழைத்து கேட்டபோது அவ்வாறு எந்த ஆட்சேபனையும் தனக்கு வரவில்லை என்று தெரிவித்தார். எதிரி அ.சா.2 முருகசாமியிடம் பணம் எதுவும் கேட்கவும் இல்லை அ.சா.2 எதிரிக்கு பணம் எதுவும் கொடுக்கவும் இல்லை என்றால் சரியல்ல. அ.த.சா.ஆ.5 ஒப்படைப்பு மகஜர் நான் சொன்ன நேரத்தில் தயார் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. நான் அரசு அதிகாரி என்பதால் லஞ்ச ஒழிப்பு போலிசாரின் நிர்பந்தத்திற்கு பயந்து உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை:** இல்லை.

"Taken down by me/before me in open Court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct"

N SENTHIL MURALI
Digitally signed by N SENTHIL MURALI
Date: 2024.09.20 19:18:46 +0530

**Special Judge,**
P.C.ACT Cases,
Sivagangai.